# நவகத்தேகம பிரதேச சபை
# புத்தளம் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 08 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 12 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஒக்தோபர் 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் நவகத்தேகம பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நவகத்தேகம பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 15,755,586 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம்

ரூபா 1,531,935 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 603,601 ஆக இருந்தது

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 06 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,760,261 ஆக இருந்ததுடன், பட்டோலைகளின் பிரகாரம் அக்கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 11,667,840 ஆக இருந்தது.

(ஆ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,951,283 ஆக இருந்ததுடன் அதில் ஒரு வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 377,240 ஆக இருந்தது.

(இ) தலைவரிடமிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 968,120 ஆகும்.

(ஈ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,623,617 ஆக இருந்ததுடன் அதில் ஒரு வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 11,875 ஆக இருந்தது.

(உ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 493,290 ஆக இருந்ததுடன் ஒரு வருட காலத்தை விஞ்சிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 285,221 ஆக இருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | - | - | - |
| (ii) | வாடகை | 578 | 566 | 12 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 182 | 173 | 09 |
| (iv) | ஏனைய வருமானம் | 4,316 | 4,316 | - |

**2.3.2 நீதிமன்றத் தண்டப் பணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 577,769 தொகையான நீதிமன்றத் தண்டப் பணம் கிடைக்க வேண்டியிருந்தது.

**2.4 செயற்பாடற்ற பௌதீக வளங்கள்**

பழைய நீர் உத்தேசத் திட்டத்திற்குரிய ரூபா 750,000 பெறுமதியான சொத்துக்கள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமும், ரூபா 332,500 பெறுமதியான மினி குபோட்டா டெக்ரர் மற்றும் ரேலர் என்பன பல வருட காலமாகவும் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

**2.5 செயலற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டின் போது சுயதொழில் உற்பத்தி வருமானங்களிலிருந்து சபை உழைத்த வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,530,003 ஆக இருந்ததுடன் அதில் மீளளிப்புச் செய்யக்கூடிய சம்பளம் தவிர எஞ்சிய சம்பளத்திற்காகவும் சபையின் கட்டாய செலவினங்களுக்காகவும் ஏற்பட்ட செலவினம் ரூபா 1,131,458 ஆக இருந்து. இந்த கட்டாய செலவினங்களில் உள்ளடக்கப்பட்ட எரிபொருள் செலவினம் மற்றும் பழுதுபார்த்தல் செலவினமான ரூபா 685,242 தொகை சபையின் சுயதொழில் உற்பத்தி வருமானத்துடன் ஒப்பிடுகின்ற போது 45% ஆன உயர் சதவீத்தைக் கொண்டிருந்தது. மொத்த எாபொருள் மற்றும் பழுதுபார்த்தல் செலவினங்களில் 55% உம் தலைவரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட எரிபொருள் செலவினமாகும்.

(ஆ) 2011 இன் வருடாந்தம் அமுல்படுத்தும் அபிவிருத்தித் திட்டங்களின் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட மாகாண குறித்த வேலைகளில் உள்ளவாறாக நிறைவேற்றப்பட்ட வேலைகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறிருந்தது.

| **ஏற்பாடு செய்யப்பட்ட நிதி மூலம்** | **பாதிடப்பட்டது** | | **உள்ளவாறானது** | |
|---|---|---|---|---|
| | **வேலைகளின் எண்ணிக்கை** | **செலவினம்** | **வேலைகளின் எண்ணிக்கை** | **செலவினம்** |
| | | ரூபா.மில்லியன் | | ரூபா.மில்லியன் |
| மாகாண குறித்த | 11 | 8.4 | 02 | 1.1 |
| விசேட செயற்திட்டம் | 10 | 416.0 | 09 | 4.0 |
| | 21 | 424.4 | 11 | 5.1 |

அதன் பிரகாரம் வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தில் அடங்கியிருந்த அபிவிருத்தி உத்தேசங்களில் நிறைவேற்றப்பட வேலைகளின் சதவீதம் 42% ஆன குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. மொத்த மூலதனச் செலவின மதிப்பீட்டினை ஒப்பிட்ட போது உள்ளவாறான மூலதனச் செலவினம் 0.14% ஆன குறைந்த சதவீதத்தைக் கொண்டிருந்தது.

(இ) சபையின் வருமான மூலங்களில் இருந்து 2011 ஆம் ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய முத்திரைக்கட்டண வருமானம் இனங்காணப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்ட ரூபா 750,000 பெறுமதியான நீர்த் திட்டத்தை முன்னேற்றுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படாமை, தொடர்ச்சியாக நிலுவையாகக் காணப்பட பழைய நூலகக் கட்டிடத்தின் நிலுவை வாடகைப் பெறுமதியான ரூபா 21,000 இனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் சபையின் வருமானம் வீழ்ச்சியடைந்தமை மற்றும் புதிய வருமான மூலங்களுக்கு போதியளவான முயற்சிகள் செய்யப்படாமையின் காரணமாக சபையின் கட்டாய செலவினங்களைத் தீர்ப்பதற்கு போதியளவான வருமான மூலங்களைத் தோற்றுவிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தத் திட்டம் நியமங்களுக்கு இணங்க கூடிய வகையில் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட மட்டம் மதிப்பிட்டிற்கு உள்ளாக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6 உள்ளகக் கணக்காய்வு**

---

நிறுவகத்தில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு